DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, MAYILADUTHURAI
CASE NO. CC. 11/2022

Deposition of LW9 Examined as PW8 Date :30.12.2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராமமூர்த்தி | Caste | : | |
| Father's Name | : | கோவிந்தசாமி | Calling | : | SSI of police (Rtd) |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 60/2024 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 30.12.2024**
**A1 , A2 present**

**முதல் விசாரணை**

நான் மணல்மேடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது மயிலாடுதுறையில் வசித்து வருகிறேன். கடந்த 24.08.2021 ம் தேதி இரவு 21.30 மணிக்கு பாகசாலை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் இருந்த கிடைத்த தகவலை பெற்று அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த விஜயகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் காவல்நிலைய குற்ற எண். 303/2021 இதச பிரிவுகள் 294(b), 324, 506(2) ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கினை பதிவு செய்தேன். (**முதல் தகவல்அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சின்ராஜ், ராஜமாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். **( பார்வை மகசர் அ.சா.ஆ.8, மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.).** பின்னர் பட்டியல் சாட்சிகள் விஜயகுமார், ராஜாராமன், பெருமாள், ஜெயசங்கர் ஆகியோர்களையும் மகசர் சாட்சிகளையும் விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில் பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில் குற்ற சம்பவம் உண்மை என தெரிய வந்ததில் எதிரிகளை தேடிய போது கடந்த 25.08.2021 ம் தேதி 12.30 மணிக்கு அல்லிவிளாகம் பேருந்து நிறுத்தம் அருகில் நின்று கொண்டிருந்த எதிரிகளை குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மேற்கண்ட வழக்கு ஆவணங்களை மேல் விசாரணை செய்யும் பொருட்டு உதவி ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். அவர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

முதல் தகவல் அறிக்கையில் காலம் 3–ல் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.08.2021 ம் தேதி நேரம் 10.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் 24.08.2021 ம் தேதி 21.30 மணிக்கு தகவல் கிடைத்தது. அதே காலத்தில் குற்ற நிகழ்வு நாள் 24.08.2021 தேதி நேரம் 21.30 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர்கள் கொடுத்த புகாரில் அ.சா.1 க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் 3 செண்ட் காலி மனை சம்பந்தமாக அடிக்கடி பிரச்சனை ஏற்படும் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் வாங்குவதற்கு முன்பு விபத்து பதிவேட்டை பார்த்தீர்களா என்றால் பாரத்தேன். அந்த விபத்து பதிவேட்டில் 24.08.2021 ம் தேதி மாலை 6.00 மணிக்கு 2 நபர்கள் அரிவாளால் தாக்கியதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். நீங்கள் வாக்குமூலம் வாங்கும் போது இரவு 9.30 மணிக்கு சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மருத்துவரிடம் ஒரு

நேரத்தையும் உங்களிடம் ஒரு நேரத்தையும் மாற்றி சொல்லியுள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதங்களை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். 3 செண்ட் நிலம் யாருக்கு சொந்தமானது என்பதை பற்றி விசாரணையில் தெரிந்து கொண்டீர்களா என்றால் சாட்சிகள் சொன்னதை வைத்து தெரிந்து கொண்டேன். விசாரணையில் அ.சா.1 மது அருந்தும் பழக்கம் உடையவர் என்பதை தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. பார்வை மகசர் மாதிரி வரைபடம் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து எதிரிக்கு எதிராக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1க்கு வேறு வகையில் வேறு விதத்தில் ஏற்பட்ட காயத்தை வைத்து பொய்யாக புகார் கொடுக்கப்பட்டு சரியாக விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நேரம் 25.08.2021ம் தேதி காலை 10.00 மணி என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருவாரூர் மருத்துவமனைக்கு செல்வதற்கு சுமார் 2 மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு மயிலாடுதுறை மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைத்து அங்குசென்று அ.சா.1 மேல் சிகிச்சைக்காக திருவாரூர் மருத்துவமனைக்கு சென்றிருந்ததால் திருவாரூர் மருத்துவமனைக்கு சென்று புகார் வாக்குமூலம் பெற்றீர்கள் என்றால் சரிதான். அ.சா.1க்கு வேண்டிய நபர்களை சாட்சியாக விசாரித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தை திருவாரூர் மருத்துவமனையில் வாங்கவில்லை அ.சா.1– க்கு வேண்டிய நபர் எழுதப்படாத பேப்பரில் கைரேகை பதிவு செய்து கொடுத்த பேப்பரில் புகாரினை பூர்த்தி செய்து கொண்டீர்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

30/12/24